நாராயண தாசர் அருளிய

# திருவெவ்வுளூரந்தாதி

பதிப்பாளர்

மீ.அபிதகுஜாம்பாள்

நெறியாளர்

முனைவர் ய.மணிகண்டன்

தமிழ் இலக்கியத் துறை

சென்னைப் பல்கலைக் கழகம்

சென்னை - 600 005

ஆகஸ்டு - 2007

நாராயணதாசர் அருளிய

# திருவெவ்வுளூரந்தாதி

சுவடியியல் மற்றும் பதிப்பு
பட்டயப்பேற்றிற்காகச்
சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு
அளிக்கப்பெறும் பதிப்பேடு

பதிப்பு
**மீ.அபிதகுஜாம்பாள்**

நெறியாளர்
முனைவர் ய. மணிகண்டன்
விரிவுரையாளர்
தமிழ் இலக்கியத்துறை

தமிழ் இலக்கியத்துறை
சென்னைப் பல்கலைக் கழகம்
சென்னை - 600 005

ஆகஸ்டு - 2007

சுவடியியல் மற்றும் பதிப்பு என்னும் பட்டயப்பேற்றிற்காக
சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு அளிக்கப்பெறும்
பதிப்பேடு. பதிவு எண் - 53010602

# நெறியாளர் சான்றிதழ்

முனைவர் ய.மணிகண்டன்
விரிவுரையாளர்
தமிழ் இலக்கியத்துறை
சென்னைப்பல்கலைக் கழகம்
சென்னை - 600 005.

திருவெவ்வுளூரந்தாதி எனும் தலைப்பிலான ஓலைச் சுவடியைச் சுவடியியல் மற்றும் பதிப்பு என்னும் பட்டயம் பெறுவதற்காக மீ.அபிதகுஜாம்பாள் அவர்கள் என் மேற்பார்வையில் பதிப்புச் செய்தார் என்றும் இப்பதிப்பு இவர்தம் தனி முயற்சியில் உருவானது என்றும் உறுதியளிக்கின்றேன்.

நாள் :

நெறியாளர்

இடம் :

( ய.மணிகண்டன் )

# பதிப்பாளர் சான்றிதழ்

மி.அரிதகுஜாம்பாள்
தமிழ் மொழித்துறை
சென்னைப் பல்கலைக் கழகம்
சென்னை - 600 005.

சுவடியியல் மற்றும் பதிப்பு என்னும் பட்டயப் பேற்றிற்காகச் சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு அளிக்கப்பெறும் திருவெவ்வுளூரந்தாதி - ஓலைச்சுவடி எண் டி258 - என்னும் தலைப்பிலான இப்பதிப்பேடு என் தனி முயற்சியில் உருவானது என்று உறுதியளிக்கின்றேன்.

நாள் பதிப்பாளர்

இடம்

( மி.அரிதகுஜாம்பாள் )

# நன்றியுரை

சென்னைப் பல்கலைக் கழக தமிழிலக்கியத் துறையில் சுவடியியல் பட்டய வகுப்பில் சேர வாய்ப்பளித்து, சுவடியியல் பட்டயப் பயிற்சி வகுப்பில் சிறப்பான முறையில் பயிற்சி கொடுத்த தமிழிலக்கியத் துறைத்தலைவர் பேராசிரியர் உயர்திரு. வீ.அரசு அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சுவடியை முறையாகப் படிக்க, பதிப்பிக்க வேண்டுமெனப் பயிற்சியளித்தும், இவ்வகுப்பு தொடர்பாக நூலைப் பதிப்பிக்க எனக்கு ஊக்கமளித்து வழிகாட்டிய நெறியாளர் முனைவர் ய.மணிகண்டன் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சுவடியியல் மற்றும் பதிப்பு என்னும் பட்ட ஆய்வேட்டிற்காக சுவடி அளித்து உதவிய சென்னைப் பல்கலைக் கழக, தமிழக அரசு கீழ்த்திசை நூலகக் காப்பாளர் முனைவர்.செளந்திர பாண்டியன் அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சுவடியியல் மற்றும் பதிப்பு எனும் இந்த பட்டயப் படிப்பில் சேர என்னை ஊக்கப்படுத்திய என் பெற்றோர் திரு.மீனாட்சி சுந்தரம், திருமதி.கோகில ராணி

அவர்களுக்கும் என் உடன்பிறவா சகோதரர்கள் திரு.இரமேஷ் திரு.சீனிவாசன், சகோதரி செல்வி.மீ.கோசலாதேவி, சகோதரன் செல்வன் மீ.அகத்தீஸ்வரன் ஆகியோர்களுக்கும் என் உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலும் என்னுடன் இருந்து உற்சாகமூட்டிய அனைத்து நல்லுள்ளங்களுக்கும், உன்னத ஆத்மாக்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நன்றியுடன்,

மீ.அபிதகுஜாம்பாள்

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| முன்னுரை | 1 - 4 |
| பதிப்புரை | 5 - 10 |
| செய்யுள் | 11 - 62 |
| பின்னிணைப்பு | |
| 1. செய்யுள் முதற்குறிப்பகராதி | 63 - 67 |
| 2. சொல்லடைவு | 68 - 75 |
| 3. அருஞ்சொற் பொருள் | 77 - 80 |
| 4. படங்கள் | 81 - 83 |
| துணைநூற் பட்டியல் | 85 |

# முன்னுரை

இவ்வுலகம் இறைத்தன்மையோடு தொடர்புடையது என்பது பல ஞான நூல்களின் வழியாகத் தெளிவாகிறது. ஞானமென்பது இரு வகைப்படும் அவை 1.தன்னை அறியும் ஞானம்,2.பரலோகத்தை அறியும் ஞானம் என்பனவாம். எல்லாம் நான் (அகம் பிரம்மாஸ்மி) என்பது வைணவத் தத்துவம். எல்லாம் நீ (தத்துவ மசி) என்பது சைவத் தத்துவம். வைணவம் என்பது வாயினாலே (நவவாக்ஷரி) 9 அட்சரங்களை உச்சரிப்பதாகும். சைவம் என்பது (பஞ்சாக்ஷரி) 5 அட்சரங்களை உச்சரிப்பதாகும்.

நம் முன்னோர்கள் தன்னுடைய ஞான அனுபவங்களை ஓலைச் சுவடியில் வரைந்துள்ளனர். ஓலைச்சுவடியில் எழுதுவது கடினம். ஆதலால் பொய்யான செய்திகளை எழுதமாட்டார்கள். பொய் பேச்சு வழக்கில் மட்டுமே இருந்திருக்கிறது. கி.பி 1885 இல் தான் செம்மையாக பதிப்புத்துறை வளர்ந்தது. அதற்கு பிறகு பொய்யை எழுத்து வடிவில் எழுத ஆரம்பித்தார்கள். அதற்கு முன் பொய்யானது பேச்சு வழக்கில் மட்டுமே இருந்தது. முற்காலத்தில் எல்லோரும் செய்யுள் வடிவில் தான் எழுதுவார்கள். அந்த நிலை இன்று எட்டாக் கனியாக உள்ளது. இறைவனருள் பெற்ற பிறகே இந்நிலை எய்த முடியுமென்பது யாருக்கும் தெரியாத ஒன்றாக இருக்கிறது. இறையருள் பெறுவதற்கு இறைவனின் துதி பாட வேண்டும் என்பது நம் முன்னோர்களால் தெரிய

வருகிறது. அத்தகைய துதியை பாடுவோமேயானால் நமக்கும் இறைத்தன்மை கிடைத்து இறையருள் பெறலாம்.

இறையருள் என்பது மூன்று காலத்தையும் உணர்ந்து சொல்லத்தக்க வலிமை பெறுவதாகும். நம்மில் பலர் பகுத்தறிவுள்ளதாக கூறிக் கொண்டு இருக்கிறோம் ஆனால் இன்னும் 5 நிமிடத்திற்கு பிறகு என்ன வார்த்தை பேசப்போகிறோம் என்பதை அறுதியிட்டுக் கூற இயலாத நமக்கு எந்த வகையில் பகுத்தறிவு நிறைவு பெற்றதாகக் கருதுகிறோம் என்பது புரியாத ஒன்றாகவே உள்ளது.காலத்தை பகுத்தறிவதே பகுத்தறிவு ஆகும்.

தத்துவத்தை உணர்ந்தோர் தவத்தோர். தத்துவங்களை யார் உணர்கின்றார்களோ அவர்களே தவநிலை எய்தவர்கள் ஆவார்கள். தத்துவம் - தத்து + அவம் , ஒருபடத்தை பார்த்து தத்துரூபமாகயிருக்கிறது என்றால் உயிர் நிழலாடுகிறது என்று பொருள். தத்து என்றால் உயிர், அவத்தை என்றால் படியேறுவது. யார்யாருக்கு என்னென்ன நாமகரணம் சூட்டப்பட்டுள்ளதோ அதுவே தத்துவமாகும் சிவ தத்துவம் என்பதை காற்றை அடிப்படையாகக் கொண்டது. விஷ்ணு தத்துவம் என்பது தண்ணீரை அடிப்படையாகக் கொண்டது.(ஆதலால் தான் வைணவ கோயில்களில் தீர்த்தம் வழங்கப்படுகிறது)

பிரம்மத் தத்துவம் என்பது விளக்குத் தத்துவம் (ஏற்றினால் தான் எரியும்) இந்த மூன்றுத் தத்துவத்திற்கு பிறகு கடைசியாகத் தோன்றியதுதான் சுப்ரமணியர் தத்துவம்

நீருபூத்த நெருப்புத் தத்துவம்(இந்த தத்துவங்களெல்லாம் மொழி என்றைக்குத் தோன்றியதோ அன்றைக்கே தோன்றியதாகக் கருதப்பட வேண்டும்).

எழுத்தறிவித்தவன் இறைவன் என்ற கோட்பாட்டின்படி இந்தமொழியை முதன் முதலில் யார் அறிவித்தார்களோ அவர்களே இறைவனாவார்கள். பேரகத்தியத் திரட்டு என்ற இலக்கண நூல் முன்னுரையில் திருமுருகப்பெருமான் அகத்தியமகாமுனிவரை அழைத்து இங்கு இருக்கும் தமிழைக் கையாளுக என்ற உத்திரவிட அகத்தியர் மூலமாக இந்த தமிழ் தமிழுலகத்திற்கு அளிக்கப்பட்டதாக கருத்து நிலவுகிறது. இன்னும் கூட ஆழமாகச் சிந்தித்துப் பார்க்கும் போது முருகப்பெருமானுக்கு முற்பட்டதாகக் கூட இந்த தமிழ் இருந்திருக்கலாம் என்று நினைக்க இடமுண்டு. தமிழ் என்பது ஒரு மொழியல்ல ஒரு மனிதனைத் தெய்வமாக்குகிற கருவி.

***இறைவனை அடைய 4 மார்க்கங்கள் உள்ளன.***

1. சரியை - தாச மார்க்கம்( தமிழ்)

2. கிரியை - சற்புத்திர மார்க்கம் (தம்+இழ்)

3. யோகம் - சக மார்க்கம் (த்+அமிழ்)

4. ஞானம் - சன்மார்க்கம்(த் +அம்+இழ்)

இதில் ஞானமே மனிதனை இறைவனாக்கும் மார்க்கம் ஆகும்.

இறைவன் என்பவர் ஆக்கல், காத்தல், அழித்தல்,

மறைத்தல், அருளல் என்ற ஐந்தொழில் புரியும் வல்லமையும், அணிமா, மகிமா,லகிமா,கரிமா,பிராப்தி, பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவம் என்பதை செய்யும் அட்ட மகா சித்தி வல்லமையும், நடந்தால் கால் கீழே படாமலும்( பறக்கும் தன்மை - ககன மார்க்கம்), நரை, திரை, மூப்பு, பிணி, சாக்காடு ஆகியவற்றுக்கு அப்பாற்பட்டவர். இந்நிலை எய்த தமிழ்மொழி வழிவகுக்கிறது. இம்மொழி மூலம் இறைவனைக் காணலாம்.

1. பக்தி மார்க்கம்
2. யோக மார்க்கம் (தவ மார்க்கம்)
3. ஞான மார்க்கம்

ஞானமார்க்கத்தின் வழிவந்தவர்களே இறைவனை அடைந்து செய்யுளைக் கையாளுகின்றவல்லமை பெறுகின்றவர்கள். ஓலைச்சுவடியில் எழுதியவருடைய நிலை உயர்வாகக் கருதப்படுகிறது.(ஓலைச்சுவடியில் செய்யுள் யாத்தவர்களே இறையருள் பெற்றவர்கள்) அவ்வாறு உயர்வாகக் கருதக்கூடிய ஓலைச்சுவடியை அடியேன் பிரதி எழுதி பதிப்பு செய்வதில் பெருமகிழ்வு கொள்கின்றேன்.

# பதிப்புரை

அச்சுப்பதிப்பு(தாள்) என்பது தமிழகத்தை பொறுத்தமட்டில் 1885 பிறகுதான் பிரபலமானது. இதற்கு முன்னர் பதிப்புத்துறை என்பது இல்லை. எல்லாம் ஓலைச்சுவடியில் மட்டுமே எழுதப்பட்டு வந்துள்ளன என்பது எல்லோருக்கும் தெரிந்த ஒன்று. ஓலைச்சுவடிகளில் எழுதுவது கடினம். சுவடிகளில் எழுதுவது கடினமாகையால் யாரும் பொய்யை எழுதமாட்டார்கள். தாளில் பதிப்புத்துறை வந்த பிறகு பொய்க் கலப்பாகிவிட்டது.

நாம் கையாண்ட இந்த பதிப்புத்துறையில் ஓலைச்சுவடியை எடுத்து கையாள்வதில் பொய்க்கூற்று இல்லை என்பது நிச்சயம். தற்காலத்தில் தாளில் எழுதப்படும் முறை கையாளப்படுவதால் யார் வேண்டுமானாலும் எதை வேண்டுமானாலும் பொய்யையும் மெய்யையும் எளிதாக கலந்து எழுதிவிடுகிறார்கள். இதற்கு முன்னர் அவ்வாறு பொய்யையும் மெய்யையும் கலந்து எழுதவில்லை என்பதை அனைவரும் அறிந்து கொள்ளவேண்டியது.

திருவெவ்வுளூர் தலவரலாறு - சுருக்கம்

இறைவன் எவ்வூரில் உள்ளிருக்கிறாரோ அவ்வூரே திருஎவ்வுளூராகும்.(எவ்வுள்+ ஊர் - எப்பொழுதும் உள்ளே இறைவன் குடிகொண்டிருக்கும் ஊர்). பாடல்பெற்ற சைவத்தலங்களைப் போன்று பாடல்பெற்ற வைணவத்தலங்களும் 108 உண்டு. இவ்வாறு பாடல்பெற்ற இவ்வைணவத் தலங்களை வைணவர்கள் மங்களாசாசனம் பெற்ற தலங்கள் என்று தாயார் -

வழங்குகின்றார்கள். திருவெவ்வுளூர் என்கின்ற இத்திருத்தலம் சான்றோர் உடைத்தான தொண்டை மண்டலத்தில் இடம் பெற்றுள்ளது. தற்போது திருவள்ளூர் என மருஉமொழியாக வழக்கத்தில் உள்ளது.

சைவர்கள் அம்பிகைக்கு முதலிடம் கொடுத்து பின்னர் ஈஸ்வரருக்கு இரண்டாம் இடம் கொடுத்து அழைப்பர்.உ-ம் உண்ணாமுலை உடனாய அண்ணாமலையார் என்று அழைப்பர். ஆனால் வைணவர்கள் தாயாருக்கு முதலிடம் தராமல் மகாவிஷ்ணுவுக்கு முதலிடம் கொடுத்து பின்னர் தாயாருக்கு இரண்டாம் இடம் தருகின்றனர் என்பது உண்மை. சைவர்கள் பெண்தெய்வத்தை அம்பிகை என்றும், வைணவர்கள் பெண்தெய்வத்தை தாயார் என்றும் அழைத்து வணங்குகின்றார்கள். வைணவத் தலங்கள் 108னுள் இத்திருத்தலம் 17 வது திருத்தலமாக வழங்கப்படுகிறது( நூல் அபிதானசிந்தாமணி, பக்கம் - 1897 ). வைணவத் திருத்தலங்களுள் 17வது திருத்தலமாகிய திருவெவ்வுளூரிலும் பகவான் பெயர் ஸ்ரீ வீரராகவ பெருமாள் முதன்மையாகவும் தாயார் பெயர் ஸ்ரீ கனகவல்லித்தாயார் இரண்டாவதாகவும் உயர்நிலை தந்து மக்கள் வழிபடுகின்றனர். (ஸ்ரீ = லஷ்மீகரம் நிறைந்த நிலை , வீர என்பது செயல் வீரத்தில் வெற்றி , ராகவன் = ஸ்ரீ ராமபிரானின் மறுபெயர், பெருமாள் = தன் உருவத்தை பாதாளத்திற்கும் ஆகாயத்திற்கும் நீட்டி விஸ்வரூபம் காட்டிய நிலை(பெரும் +ஆள் = பெருமாள் - பெரிய ஆள் - பெரிதாக ஆண்டவர்). கனகவல்லித் தாயார் = கன +அகம் = கனகம் - தைரியம் தரும் தெய்வம் (தங்கம் தரும்

கனகம் = தங்கம்), தாயார் = தாய் + ஆர், நம்முடைய அருவத்தாயார், உருவத்தாயார் நம்மைப் பெற்றவர்கள், அருவத்தாயார் நம்மைக் காப்பவர்கள். இங்கு ஆர் என்பது தொடர்ந்து என்று பொருள் கொள்ளுவோமேயானால் நம்மை என்றென்றும் காப்பாற்றும் தாய் ஆவார்.).இத்திருக்கோவிலில் தொடர்ந்து விளக்கு எரிய வேண்டி 4.4.96 அன்று முதல் தொடர்ந்து எரியும் நெய் விளக்கு ஏற்றும் திட்டம் கொண்டு வரப்பட்டது.பவ்வம் என்றால் பவுர்ணமி, எவ்வுள் என்றால் அமாவாசையாம். ஆகவே அமாவாசையன்று எவ்வுளூர் மகாவிஷ்ணுவை சேவிக்க எல்லா நலனும் பெறலாம்.

நூலாசிரியர் குறிப்பு

சுவடியிலுள்ள கடைசிப்பாடலின் வாயிலாக நாராயணதாசர் என்பவர் - வைணவநெறியாளர் இயற்றியதாகத் தெரியவருகிறது. இவரின் இயற்பெயர் இன்னதென்று அறிய முடியவில்லை. திருமாலின் மீது மிகுந்த பக்தி கொண்டமையால் நாராயணதாசர் என அழைக்க இவர் விரும்பியிருக்கலாம். இவர் ஒரு தமிழ் கவிஞர் என்று அபிதான சிந்தாமணி நூல் வழியாகத் தெரிய வருகிறது.

சுவடி அமைப்பு

இந்த திருவெவ்வுளூரந்தாதி - சுவடி எண் - டி258 ல் அமைந்துள்ளது. 71 பக்கங்கள் உள்ளன. ஒவ்வொரு பக்கத்திற்கும் 4 வரிகள் அமைந்துள்ளன.

## நூல் அமைப்பு

திருவெவ்வுளூரந்தாதி என்ற சுவடி நூலில் கடவுள் வாழ்த்துப் பாடலோடு 104 பாடல்கள் அமைந்துள்ளன. இதில் முதல் 4 பாடல்கள் கடவுள்வாழ்த்தாக அமைந்துள்ளன. முதற் பாடல் - உடையவர் தோத்திரம், இரண்டாம் பாடல் - நம்மாழ்வார் தோத்திரம் ,மூன்றாம் பாடல் - தாயார் தோத்திரம், நான்காம் பாடல் - வாணி தோத்திரம் என உள்ளது. இந்த நான்கு பாடல்கள் முறையே வெண்பா,கலித்துறை,வெண்பா, கட்டளைக்கலித்துறை என்ற பாவகைகளில் அமைந்துள்ளது.இந்த 104 பாடல்களோடு சுவடியில் 16 சித்திரக்கவிகள் இடம்பெற்றுள்ளது. சுவடிப் பதிப்புக்கு சித்திரக் கவிகள் தவிர்த்து 104 பாடல்கள் மட்டுமே எடுத்துக் கையாண்டுள்ளேன்.அந்தம் ஆதியாகக் கொண்டு வருவது அந்தாதி.அந்த வகையில் இந்நூல் அந்தாதிப் பாடலாக அமைந்துள்ளது.

## நூற்சிறப்பு

100 பாடல்களில் நடுவேநடுவே சிறப்பான செய்திகள் இடம் பெறுகின்றன. ப, ம என்ற இரு எழுத்துகள் நீங்கலாக வரும் நிரோட்டகம் பற்றிய ஒரு செய்யுள் அமைந்துள்ளது. அடுத்து வஞ்சித்துறை பாடல்கள் இரண்டும், நிலை மண்டில ஆசிரியப்பாவால் ஆன பாடல் ஒன்றும் அமைந்துள்ளது. தகர வரிசையே பாடலடிகளாக அமைந்த தகர வருக்கச் செய்யுள் ஒன்றும்,ஆளரைச் சக்கரம் என்று ஒரு செய்யுளும்( ஆளரைச் சக்கரம் - எதிரியை சம்ஹாரம் பண்ணுகிற சக்கரம்,அதுவே

சுதர்சனச் சக்கரம்), தரிசனம் என்றால் மனிதன் இறைவனை வணங்குவது அதுவே சுதர்சனம் என்றால் மனிதன் தன்னுடைய ஆத்மாவாகிய இறைவனைக் கண்டு தரிசிப்பது. (ஆத்மா என்பது 24 கூட்டுச்சரக்கு இந்திரியங்கள் - 2 அவை ஞான,கர்ம இந்திரியங்கள், இந்த ஞான இந்திரியங்கள் - 5 ,அவை மெய்,வாய்,கண், மூக்கு,செவி இவை செய்யும் காரியங்கள் - 5, இதே போன்று கர்ம இந்திரியங்கள் - 5 , அவை வாய்,கை,கால்,சிறுநீர்வழி, பெருநீர்வழி இவற்றோடு இவை செய்யும் காரியங்கள் - 5 இதனுடன் மனம், புத்தி,சித்தம்,அகங்காரம் என்ற அந்தக்கரணங்கள் 4 ஆக மொத்தம் 24 இது சைவ சித்தாந்த நூலான சிவப்பிரகாச கட்டளையில் இடம் பெற்றுள்ளது) இந்த ஆத்மாவை தரிசனம் செய்ய தமிழ் வழிவகுக்கிறது, வல்லின மெல்லின இடையினச் செய்யுள்கள் மூன்றும், கூட சதுக்கம் என்று ஒரு செய்யுளும், ஒற்றின்றி வந்த செய்யுள் இவ்வாறு சிறப்புடன் விளங்கும் 11 செய்யுள்களைத் தவிர்த்த மற்ற பாடல்கள் அனைத்தும் கட்டளைக் கலித்துறையால் ஆனவை.100 பாடல்களிலும் எவ்வுள் என்ற சொல் கையாளப் பட்டிருப்பது மிகவும் சிறந்த ஒன்றாகும்.

நூற் பொருள்

தற்போது திருவள்ளூர் என்று அழைக்கப்படும் ஸ்தலத்தில்எழுந்தருளியுள்ள ( ஸ்ரீ வீரராகவ ஸ்வாமி, ஸ்ரீ கனகவல்லித் தாயார்) தெய்வங்களைப் போற்றுவதாகவும், ஸ்தலத்தின் பெருமையை எடுத்துக் கூறுவதாகவும், மேலும்

வைணவத் தத்துவமான அஹம் பிரம்மாஸ்மியை பரப்புவதற்காகவும் இந்நுல் எழுந்தாகத் தெரிய வருகிறது.

# திருவெவ்வுளூரந்தாதி

*0.0 உடையவர் தோத்திரம் - வெண்பா*

**ஆழிசங்கை மாற்களித் தாண்டன்பா தம்பிறவி**
**ஆழிசங்கை மாற்றிவைத் தாய்மாயத் திலாழிசங்கை**
**பூதூர் வையாநின் பொன்னடியென் சென்னியிறும்**
**பூதூர் வையாயிப் போது.** 1

*0.1 நம்மாழ்வார் தோத்திரமும் அவையடக்கமும் கலித்துறை*

**சீரார் குருகையன் றாடொ முதுட்கொண் டுசிற்றறிவிற்**
**கூரார் வமேத்துக வென்னப் பழங்கணைக் கொல்லநற்பா**
**லாரார் கலியிற் றுயின்றுயென் றெவ்வுளந் தாதிசொல்வல்**
பாரார் கவிக்குற்றம் பாராரே னும்பலம் பற்றிநின்றே. 2

*0.2 தாயார் தோத்திரம் - வெண்பா*

என்கோத றமுடித்திங் கேத்துவே னென்றுமெவ்வுண்
மனகோனி டத்தார்வம் வைத்துறையும் - பொன்கோ
கனகவல்லித் தாயார் கனத்த தனத்துக்
கனகவல்லித் தாயார் கழல். 3

*0.3 வாணி தோத்திரம் - கட்டளைக் கலித்துறை*

பாரதி கந்தரந் தாளந் தரந்திதுறழ் பங்கயத்திற்
பாரதி கந்தகு மேனிப் பணியிடைப் பந்திறகொங்கைப்
பாரதி கந்த மறையோன் கிழத்தியின் பத்மநற்றாள்
பாரதி கந்த புலையே னிவரப் பவக்கடற்கே. 4

நூல் கட்டளைக் கலித்துறை

1. திருவரன் பாரிற் றிருவான்றந்
தன்பர சேயெனத்தாய்க்
கருவரன் மாய்ந்துக் கருவரன்
றோடக் கடிந்தவன்றம்
பருவரன் மோதும் பருவரன்
பிற்கருள் பண்பினன்கா
மருவரன் கௌரி மருவரன்
போற்றெவ்வுண் மாயவனே. 5

2.மாயா வுடலருண் மாயா வமரர் வழுத்தெவ்வுளர்ந்
தேயா விருவினை தேயா
வுனைத்தொழல் செய்திலர்க்கென்
றாயா வறிபவர்க் காயா
யருமறை யாய்ந்தறியாக்
காயா நிறத்தவ காயா
யிமுக்கனைக் கண்டுகொண்டே. 6

3. கண்டா மெனுமொழி கண்டா

னரவிந்தங் கார்குழல்சேர்

தண்டா மரையவ டண்டா

தமார்ப சலங்கவர்ந்த

கொண்டா லடியனைக் கொண்டா

னினக்குக் கொடுஞ்சிரம

முண்டா யுரையனை யுண்டா

யணியெவ் வுளூரத்தனே. 7

4. அத்தா வணைச்சக் ரவத்தா

வழிவழி யாளவந்த

சித்தா வுனைத்தெரி சித்தா

வலின்மனஞ் சேர்ந்துருகிக்

கத்தா வெனச்சொலிக்

கத்தா திருக்கிற் கவி

சத்தாய் பரவசத் தாலெங்

ஙனமுத்தி சார்வதுவே. 8

5. சாரலை வேங்கடச் சாரலை

நண்ணித் தலம்டவார்

மூரலை முத்தென் றுமூரலை

யீட்டியென் மூடநெஞ்சே

யீரலை போற்கத் தியீரலை

வவ்விக்கொண் டீமக்குறள்

பாரலை தோடுவ பாரலை

யாதெவ்வுட் பற்றுவையே. 9

6. பற்றின மற்றிலன் பற்றின

மாகியும் பத்தர்கள

கற்றின புன்மையன் கற்றின

மேய்த்துவ கண்ணபொறி

யிற்றின வுள்ளம் பயிற்றின

னாதலி னீண்டுய்குவ

தெற்றின லாம்பனி யெற்றின

னாயெவு ளின்றலனே. 10

7. இன்றல மந்தன னின்றல

கிட்டிட லெவ்வுளென்று

நின்றல முற்றுவ ணின்றல

மில்ல னிரைபிரிந்த

கன்றல மாந்துழல் கன்றல

னன்பா கணமகன்றாற்

குன்றல டாமுலைக் குன்றல

ரும்பொன்னைக் கூடுரனே. 11

8. கூடு மடியருட் கூடு

மவர்துதி கொண்டவெவ்வு

ணாடு மயன்மறை நாடு

மகத்திலு நற்பரமே

வீடு மழற்கடு வீடு

மராமணி விற்சிரத்தின்

பாடு முனதளி பாடு

மலர்த்தாள் பரவினவே. 12

9. பரந்தா னுனக்கு பரந்தா

பனேயெனைப் பற்றிவிட்டுக்

கரந்தா லுமேயென் கரந்தா

வருளெனக் காட்டிநிற்ப

இரந்தா மவற்குயிர்ந்

தான மாகவு மிரவலராற்

புரந்தா விலெவ்வுட் புரந்தா

யிலென்கிலா புன்மையன்றே. 13

10. என்றா யெனுமெனை யென்றா

ளடிமைக் கிசைவிப்பதே

என்றா நினதகப் பொன்றா

வெனச்சினம் பூண்டனையோ

என்றா நிலையடி யென்றா

பமேகநின் னின்னருளே

முன்றா சரேத்தெவ் வுணமுன்றா

கமோடு முயங்கினனே. 14

11. முயங்கு மறைகண் முயங்குமென்
றாலிந் தமூடனுக்கு
வயங்கு னடிப்பங் கயங்குறுங்
கோல வறிதடைந்தேன்
தயங்கு பொறிய லியங்குவட்
டூர்மது சார்ந்துணுமோர்
கயங்கு லவேவ்வு ளியங்குகண்
ணாவிரங் காததென் னே. 15

12. காதலை யான்சொலி னாதலை
யோதிலை காணவெனின்
சாதலை யாயென வோதலை
மெய்யுரு வேனுமன்பர்
மாதலை யீட்டத் தையீதலை
யாறின் மழையெனுமெய்
நோதலை யுற்றிடு மோதலை
வாவெவ் வுணோன்றவனே. 16

13. நோன்ற தவங்களு மான்ற

பலபல நூலறிவுஞ்

சான்ற வொழுக்கமு மேன்ற

வருத்தியுஞ் சால்புமிவை

யோன்ற னவென்று ளைதோன்றலின்

றேனுமென் புன்றலையி

லூன்ற நினத ருளீன

மளிக்கும வெவ்வுளூர்வனே. 17

14. ஊர்ந்தான் கருடப்புள் ளூர்ந்தான்

கனக நுரத்தைமுன்ன

ரீர்ந்தான் மலமனம் பேர்ந்தான்

வளங்குல வெவ்வுளிடைச்

சார்ந்தான் சுரர்க்கருள் கூர்ந்தான்

றனைப்புனை காற்கவியிற்

சேர்ந்தான் மனக்கறை தீர்ந்தான்

றினமெனைத் தேற்றுவனே. 18

15. தேற்றினன் றொண்டரை மாற்றினன்
புன்கருச் சீர்விரசை
யாற்றினன் சக்கர மாற்றினன்
போற்றிடு மன்பருழை
யூற்றினன் றண்ணரு போற்றினன்
றென்ன வுளூரன்வின்னாண்
ஏற்றினன் பார்த்தரு ளாற்றின
னில்லையெற் கென்னென்பனே 19

16. என்னைக் கருதுரை யென்னை
யிடரிலி ருந்தினதாற்
பொன்னை யணிநிறத் துன்னைச்
சுகத்திற் பொருந்தியதோ
அன்னை யுயிர்க்கென முன்னை
மறைகளாற் றனமெய்யோ
மன்னை வரையள பின்னைவார்
வெவ்வுள வாழ்பவனே. 20

17. பரனைக் கனகாம் பரனைக்

கவினெவ்வுட் பாற்கிருபா

கரனைப் பொருவிற் கரனைத்

தனிய லக்கையன்சகோ

தரனைத் துளசி தரனைத்

தெரிசிக் கதந்தவப்பூ

வரனைப் புகழ்வன் வரனைப்

பெறப்போ வதிற்பெரிதே. 21

18. பொரியா யுளத்திற் பிரியா

தெனையிடர்ப் பேரகழி

தரியா தெடுத்து விரியா

டகக்கழற் சார்ந்தவுருக்

கரியா யுலகிற் கரியா

யிரங்கெனைக் கண்டுமெவ்வுட்

புரியா வருளைப் புரியா

யெனிலெனை பூட்டகமே. 22

19. பூட்டா யுதிபவங் கூட்டா
யெனனற் புதுமைவிளை
யாட்டா கவாடலை வேட்டா
யெனுமிஃ தறிகலன்மேல்
வீட்டா யெழிலெவ் வுணாட்டா
யபய மிளிரிவாதம்
தாட்டா மரைகளுங் காட்டா
திருந்திடிற் சாலநன்றே. 23

20. சாலுங் கொடியனைப் போலு
மொருவசை சார்ந்துறவா
னாலுங் கமலத் தனேலும்
படிசெய் கலனவமேப்
பாலுங்கொ ளாவகைக் கோலும்
படியெனைப் பண்ணுவித்தெக்
காலுங் கணித்தனை மேலும்
பரேத்தெவ் வுடக்காவனே. 24

21. காவல ரும்பன கத்திந்
திரன யன்கைகுவித்துக்
காவல ரும்பன காசல
வென்னக் கவினெவ்வுடக்
காவல ரும்பனகொங் கைப்பொன்
கரந்த கடையெம்கன
காவல ரும்பன சக்கனி
யேயருள் கண்டனனே. 25

22. கண்ணமை யென்ன வெழிறோ
ளுருக்மணி காந்தன்கஞ்சக்
கண்ணமை யன்னநவ நீதமுண்
டானெவ்வுட் கத்தினடிக்
கண்ணமை யன்ன னியற்றனென்
சேமுத் திகாண்விடுக
கண்ணமை யன்ன வுடலைச்
செறாது கடன்மையன்றே. 26

23. கடத்த விரும்பத மூன்றினைக்
கன்மமிக் காயமென்றுங்
கடத்த விரும்பத ராகுமென்
னெஞ்சினைக் கட்டித்துன்பங்
கடத்த விரும்பத மாக்கிடிற்
புண்ணியங் காலில்வராற்
கடத்த விரும்பத ராகமுக்
கெவ்வுடற் காரணனே. 27

24. கார மருந்த னிமேனிய
முன்னவு காரநன்ம
கார மருந்தனி வெவ்வுள
தாய்சேய் கதறத்தருங்
கார மருந்த வதுபோற்
பொறிசென் றுகாமமென்றா
கார மருந்த யிலாதரு
ளெற்குநின் கான்மலரே. 28

25. மலைவருந் தங்கள றிற்றள்
ளியென்னை நமன்றமர்செம்
மலைவருந் தங்கம தைப்பெண்
ணைப்பூவைக்கொள் வான்மறமா
மலைவருந் தங்கம தாற்புரி
யும்முனம் வந்தருள்க
மலைவருந் தங்க லையற்று
னளியெவ்வுண் மங்கலனே. 29

26. மங்கலந் தங்க வந்தகன
கிட்டிலன் வாய்த்திங்குச்சே
மங்கலந் தங்க மதிலா
ழிசங்கம் வரைவித்தனன்
மங்கலந் தங்க மனமே
பவமற வந்தவனா
மங்கலந் தங்க வுடையவ
னெவ்வுளின் மாயவனே. 30

27. மானவ நந்த னரும்புதல்

வாமணி வண்ணசந்த

மானவ நந்த வனத்தி

கழெவ்வு ணிவாசமுன்கண்

மானவ நந்த வடிவைந்

தனையென்னின் வைக்கவதை

மானவ நந்த சயனவிப் போதென் மனக்கல்லிலே.

31

28. மனவலங் கார நெடியவ

மூவடி வாங்கியவா

மனவலங் கார திருவெவ்

வுளீச மணிவலய

மனவலங் கார மராகமுங்

காட்ட மகிழ்வையுற்ற

மனவலங் கார ணமென்கொலுன்

ணித்தொழ வந்ததுவே.

32

29. வந்தனந் தந்த வெனைநீ

மறுக்கறம் மல்லளாரி

வந்தனந் தந்த வறில்லல்

லலெங்ஙன மாற்றுவாரா

வந்தனந் தந்த விளரிபச்

செல்வமா வைத்தனெறு

வந்தனந் தந்த மனைபுல்

கயத்தெவ்வுள் வண்டலனே. 33

30. வண்டலங் கந்த வனமா

லைமார்ப வளர்த்தெவ்வுளாம்

வண்டலங் கந்த மலரென

நின்ற வஞ்சமலர

வண்டலங் கந்த விரிக்கா

யென்னினு முன்மைன்றுமேற்கு

வண்டலங் கந்த ரமின்றார்

மயலினை மாற்றுகவே. 34

31. மாற்றரும் புன்மைய துன்னடி
யாரை மறந்திங்ஙனென்
பாற்றருந் தாகர மானே
னதுசெயற் பாலதன்றே
சேற்றரும் பம்புய வம்பக
வம்பசை செம்மணிக
ளேற்றரும் பட்ட முலைப்பொன்
னொடெவ்வு ளிருப்பவனே. 35

32. இருந்தா யெழிலெவ் வுளென்செய்
வோவந் திரந்தவெற்கு
வருந்தா திருவெனும் சொல்வன்
மையின்றி வலியநிரு
தருந்தா னவரும் விருந்தா
யருந்திட சண்டனுக்கு
தருந்தா வறுவலி யைக்கலி
யைக்கண் டுதாங்கலற்றே 36

33. தாங்கிலை யேனுஞ் சரணர

விந்தந் தராயெனினு

மூங்கிலை யூதிய வேதிய

வெவ்வுள முன்னவ்வர

றூங்கிலை மேற்றுயில் கொண்டவ

வன்பரைச் சுட்டியவர்

பாங்கிலை யோவெனைக் கூட்டா

யெனிலேன் பகர்நினைவே. 37

நிரோட்டகம்

34. நினைத்தனை யென்னி னினக்கேல்

செயலினை நேரச்சிந்தை

தனைத்தனைந் தின்னிடத் திறசெல்லோத்

திறசார் தற்கென்னே

யினைத்தனை யர்க்கென் றினியீ

கலாதெனை யீயநின்னிற்

றினைத்தனை யென்னை நினைக்கிலை

யேயென் றினகரனே. 38

35. கராவுகச் சேதிதவந்

 தார்வலய மகாநமவ்

வராகத் திசோர

 தணிந்தனன் வழிநணுக

பராவருமீ சக்கனிக்

 கறுநரம் பன்கமனா

மராமிசை வாம்தவந்

 தனின்முன்னந் தமானவனே. 39

இதனீற்று மொழிக்கு முதலெழுத்து

 தொடங்கி ஒவ்வொரு எழுத்து இடைவிட்டு வாசிக்க

தன்முனிந்த வாமிம் மனமறுக்க மீருர்கந

 வனந்த சேர்தார் வன மலர்ந்த சேகரா

என்னும் வஞ்சித்துறை வந்துள்ளது

திரிபங்கி

36. ஆனந்ததாய் = நின்னையேயனையாய் = இம்பராமெவ்வுளாய்

தானவள்ளால் = மின்னையேலுரனே = நம்புதாளினனே

எண்ணமுள்ளேன் = என்னையாளுவையே = வெம்புவோர்த்தீர

ரெனமுள்ளேல் = முன்னைமாதவனே = தம்பமேயரியே: 40

பிறிது பாட்டு

37. அரியேயலகை முலையுண்டழித்த வரியநிற்கே

புரியேனென்றியான் சலதியின்மூழ்கிச் சராசரத்திற்

தரியேனுறுகண் சலதியின்மூழ்கிச் சராசரத்திற்

றரியேதமற வருவெவ்வுள வாழ்த்திசுதனே. 41

தகரச் செய்யுள்

38. திதித்த ததிதுதைதை தூதிதத்

தொத்ததே தித்தித்தே

துதித்ததத் தத்த துதைதூது

தத்துத்தத் தொத்ததிதத்

துதித்த ததைத்ததீ தாதா

ததிததத் தோதத்தத்த

ததித்த துதித்ததொத் தித்துத்தத்

தத்தத் ததாதிதித்தோ. 42

வல்லினச் செய்யுள்

39. தாதா சுகப்பொறி பத்தாசொற்

றிட்டபா தைக்கப்பட்ட

காதா கதைகோ கடகத்

தொடுதடி கைக்கப்பெற்ற

போதா பதைபதைக் கக்கெட்

டதுட்டற்குப் புக்கதுபோ

தாதா தடுத்ததைப் போக்கிட்டுக்

காத்திபற் றப்பதத்தே. 43

ஆளரைச் சக்கரம்

40. பதக்கணி லெவ்வுளுள் வீதி

களில்லன் பராதரிக்க

மதக்களி றாங்கொங் கைரதிவான்

தாதை வருவனந்தா

நிதக்கவ லைப்பிணி வாராதின்

னம்புனை நீமுற்றும்பர்

பதக்கம லத்தைநின் றாள்கலுழ்ந்

தாழலென் பாமுகமே. 44

41. கூடசதுக்கம் - இதனீற்றடி யெழுத்துக்களேளை

மூன்றடியுள்ளுங் கரந்து வந்தமை காண்க

பாழுங் கருக்குழி வாய்விழுங்

கண்மத்தின் பாதமறச்

சூழுநண் ணாமு துஞானநன்

மாக்கட றோய்ந்துண்ணமே

லூழுங் கெடவந் தயர்ந்தெவ்வுள்

வாச வுரம்புரிந்து

வாழுங் கதிதரு முன்சர

ணாம்புய மான்மனமே. 45

மெல்லினச் செய்யுள்

42\. மான்மா மனமன் னினானே

மிமாணன் மணிமன்னனெம்

மான்மா னிநன்ம ணனாமனம்

மண்ணனம் மண்ணன்மன்னுண்

மான்மா னமைமின் னணனுமை

மாமே னிமனுமின்னை

மான்மா னநண்ணா மனானுன்னி

னேனிங்ஙன் மன்னமுன்னே 46

43\. முன்னந் தனுச்சேமஞ் செய்கிலா

ரன்பன மூர்க்கனாக்கை

பொன்னந் தரையிற் புதைத்திடிக்

கும்மவர் போற்றரித்தாம்

அன்னந்துய்ப் பித்துமெல் லாப்பத

னம்புரிந் தானென்றொல்லை

மன்னந் தமைதர மாளா

வருளெவ்வுள் வாழ்வலனே. 47

இடையினச்செய்யுள்

44. வலவா வொழிவருள் வாயொளி
    ரெவ்வுள வாழரியே
வலவா வலாரியுள் ளேயயர்
    வீர வலியவைய
வலவா வயவரு யீரயி
    லேவ வலியவாழி
வலவா விழிவா ளரியை
    யருளள் வழியுழைையே. 48

ஒற்றின்றி வந்த செய்யுள்

45. உழைவி ழிமாதி னொடுகா
    னகமே குறுதினமா
உழைவ ழிமேவு சிலைபு
    தலாதி யுனைமகிழ
இழையு பகார மெவன
    தைநீயு ரையீசதிரு
இழைய ணிசேருர கேசவ
    வேத விறுதியனே. 49

46. இறுதி பெறாவன துன்பங்
களோறின வின்னிசைகள்
அறுதிபெற் றாலுமுன் னின்னருள்
போல்விளை வாகிநின்றெ
உறுதிபெற் றேமிகு மென்னவை
யாதலி னூங்குணரப்
பெறுதியெவ் வுட்பர மானவ
பாவம் பிரிபடவே. 50

47. பாவனை செய்ய மனமுண்
டெனினும் பருசுவரின்
மீவனை யோவியப் பூவையஃ
தொக்கும் விகசிதத்திற்
பூவனை யீன்றவ வெவ்வுள
வாழ்ந்த பொருளொடுறும்
பாவனை யாயரு ளுண்டெனின்
மேவும் பரிமளமே. 51

48. பரிந்திடக் கஞ்சனைக் கொன்றவ

கஞ்சனைப் பாலித்ததென்

புரிந்திட வென்னை யவன்பூ

விலேவ்வுட் புரத்தவென்று

சொரிந்திட கண்ணீ ருளநெகக்

காவெனச் சொல்லிக்கரம்

வரிந்திட தாவரு ளென்றக

லேனிற்கும் வேதனையே. 52

49. வேதனை யான்னறி யெவ்வேவரி

தாமும் விதித்தன்னிவ்

வேதனை யெங்களுக் கென்றென்றுஞ்

சொல்வர் மிகுவனைநின்

வேதனை யென்றறி யாநர்க்

குதவாப்பு தல்வனென்ற

வேதனை யீன்றனை யெவ்வுள

நின்னையு மேற்குமதே. 53

50. ஏற்கும் பதமரு ளாயென்
னிலென்பழி யேற்குநிற்குந்
தோற்கும் மெனவு ணராயென்
றுசொல்லலென் றுன்மதியே
வேற்கும் பழிப்பளி கண்ணிற
தாயெவ்வுள் வீரமறை
நோற்கும் பழியறம் நிற்கில்
லையென்று நுவன்றிடினே. 54

51. நுவன்று பநுவலை யோபா
வெறுங்கை நுவலவகங்
கவன்று வரும்பா வலர்போ
லநின்றிருக் கண்டுதளி
துவன்றுவந் தேற்க ருளிவலை
யென்றானின் சாந்தளிக்கை
யவன்றுன் றுரமவ் வுளநிற்கறி
விப்பதென் ளாமறிவே. 55

52. அறிவாய் மனித னுருவா

யெடுத்து மறவப்பொழுதே

பொறியாய்ப் புலன்கள் கிடையா

மனோய்கொளப் புக்கினுடல்

செறிவாய்ப் பொருந்த வெயிற்புழுப்

போறுடி செய்கையைநீ

முறிவாய் வுறாதெவ் வுளாய்முறி

செய்கவிம் மூடனையே. 56

53. மூடும் படிபா நுவைமறைத்

தாய்முன் னைமுன்னிரண்டிற்

கூடும் யுகத்தி லதுபோறிரியு

மேற்கொளும் யுகத்தில்

வாடும் படியென் விரிஞான

பாநும றைத்தனையாற்

வீடும் படிவ திலையெவ்

வுளாயென் விளம்புவதே. 57

54. விளங்க வெமக்கருள் செய்வானிவ்

வெவ்வுளின் மேவவவன்

உளங்க ளிபேர ருளிக்கும்வந்

தேத்திட் டுமுண்ணவந்தீர்

துளங்க வுடற்றுவ நும்மைநும்

மூர்வரிற் றோத்திரிப்பீர்

களங்க மிலாதே குகவர

னாதிக் கடவுளரே. 58

55. கடத்த நினக்கு நியாயமுண்

டோவெங் கருமத்தின்

னிடத்த விரும்பவ நோய்வி

னையாவு மிகுத்தலின்றிக்

கடத்த வனுக்கருள் செய்தவ

வெவ்வுள கட்செவியி

னடத்த வினைதீர்த் திடும்வீ

ரராகவ னாமமுற்றே. 59

56. நாமஞ் சொலுந்தொழுந் தாமம்
வினவு நடுங்குமென்பெண்
காமஞ் சகிக்குமோ நீயெயு
னக்கன் றுகானிலுன்சே
யாமஞ் சலரான் புரிதுன்
பினையும் பியாற்றிடப்பல்
யாமஞ் செலுத்தி யுமாறினை
யெவ்வுளி ராகவனே. 60

57. இராக மொழித்தே வியர்மக்கள்
வீடெனதி யானெனுந்த
மராக விருஞ்செல் வமிச்சத்
துநீயுநல் வாழ்வுவக்கின்
பராக மரைப்பத வச்சுத
வெவ்வுள பாரிடந்த
வராக வடியேன் விடுவனோ
பாசப்புன் வாழ்வினையே. 61

58. வாழ்வார் மறைத்தமிழ் செய்தேத்
திநின்னைநின் மாண்பதத்தில்
ஆழ்வார் களென்றழுக் காறடைந்
தேனன் றியன்பொடுனைத்
தாழ்வார் தலையும் பனுவ
லுமின்றித் தளர்ந்தேனந்தோ
சூழ்வார் கடல்வைப் பிலென்செய்
வெனெவ்வுணற் சுந்தரனே. 62

59. சுந்த ரமாயுண்மெய் மூவா
சையாதியாற் றாக்குமன்பி
லந்தர மாயி னரைமா
மடங்கு மடைந்திலனே
கந்தர மேனிய வெவ்வுட்
கவுத்துவக் கந்தரசு
தந்தர மென்றெனு மன்புநின்
பாதச் சலசத்திலே. 63

60. சலசத் திருவரைச் சேர்க்கின
    கந்தை தருவரெவ்வுள்
நலசத் துவக்குணக் குன்றே
    நலிமெலா நாடிக்கொண்டே
குலசத் துருவெனத் துன்பமெல்
    லாமேற்கு கூட்டலென்னே
கலசத் தெனுமனத் திற்பதி
    யாய்நின் கழன்மட்டுமே. 64

61. மட்டுமற் கட்டிய மொட்டுமுட்
    டிட்டுமட் டற்றகட்டு
வெட்டுற் றபுட்குழற் கெட்டதுட்
    டத்தெட்டா விட்டவிட்டக்
கட்டுற் றலற்றெலற் றட்டதிக்
    கெட்டிடிக் கட்டுருட்டேர்ந்
தட்டுற் றகொற்றவ சொற்றிசற்
    றெவ்வுளூட் சக்கரனே. 65

62. சக்கரத் நற்புதற் கற்புரற்

கெவ்வுளிற் றற்பரற்கெட்

டக்கரத் தத்துவ கெய்ப்பறக்

கிங்கிரத் தாட்பட்டனென்

உக்கரத் தத்துறு குட்குடற்

கப்படைக் கொற்றர்க்குபா

சக்கரத் திற்குடற் றற்குமஞ்

சேனண்டல் சண்டவந்தே. 66

63. சண்டைகொண் டெண்டிசை மண்டலர்

தூற்றிச் சபிப்பரன்றி

விண்டையொக் கும்பொன் றருகினு

மெல்லுரை மேவுவரோ

கெண்டை விழிச்சியர்ப் பொன்றில

னின்னருள் கிஞ்சித்தெற்கு

விண்டை யெனிற்கொள்வன் விண்போ

கமாக விறல்விண்டுவே. 67

64. விண்டல மண்டல மாய்நல்

குரவினை மேவிடவா

கண்டல னாதிய ரேத்திடத்

தொண்டர்தங் கண்ணிமையா

மண்டல ரிட்டுறத் தேவியென்

றேயெவ்வுள் வந்தனைபொற்

குண்டல மாதவ மாதவஞ்

செய்ததென் கூறுகவே. 68

65. கூறுங் களியன் பொடீன்றோ

ரழைக்கக் குழவிநனி

வீறுங் கனியன் புறவரும்

போலெவ்வுள் வீரமுன்ன

மூறுங் கருந்தன் புநின்னிடத்

தெட்டுணை யுண்டெனிலெற்

காறுங் கடலும டங்காமிக்

கன்பெழு மாய்ந்திடினே. 69

66. ஆயுங் குதலை மழலை

தகும்பவரற் றென்சொல்லி

லேயுங் கசிய விலையெனி

லுன்மனமே தந்கைத்தோ

காயுங் கொடிய வறுமை

யினெக்குக் கசிந்தென்றுமென்

றேயுங் கவன்மனங் கல்லன்

றுமெய்யெவ் வுடேசிகனே. 70

67. தேசவி ராடக வாடைய

பாடக தென்னெவ்வுறின்

வாசவி ராகவ வாசையிற்

றத்தம வான்றொழிலி

னேசவி திப்பினை யவ்வவ்

விபுதர் நிகழ்த்தினர்சர்

வேசவி சித்திர செய்ததென்

னின்றொழி லீண்டுரையே. 71

68. ஈண்டு விளைநில மீண்டு

வெறுநில மென்றொழிலி

வேண்டு வதின்றிப் பொழியுமஃ

தொத்துயிர் மேல்விருப்போ

டாண்டு வருநீ யறிஞர்க்

கருளி யறிவிலெனை

மீண்டு புரந்திலை தோற்றைமங்

கெவ்வுள வித்தகனே. 72

69. வித்தக மார்ந்தின் னிசையோ

டிசைத்த விமலர்கவி

எத்தக வாலுவந் தேகட்

டருளினை யெவ்வுளவென்

பித்தக லற்பக் குரல்கேட்

டருளிலை பேர்மறைபொய்ப்

புத்தக நச்சல வெய்ப்புநிற்

கின்றெனப் போற்றலினே. 73

70. போற்றுந் தசவ வதார

மெடுத்தனை போற்றுமெம்முன்

றோற்றுற் தனித்தவிவ் வர்ச்சா

வதாரந் தொடுத்துனிசை

சாற்றுந் தவத்தன் பரிந்திராதி

தேவர் சாணிறைஞ்ச

ஆற்றுந் திருவரு ளோடெவ்

வுணிறைறென் றுத்தமனே. 74

71. உத்தம பத்தரை முத்தியில்

வைத்தெவ் வுளுத்துங்கநற்

கத்தம தத்துவ னேநீ

யளந்திட் டகாலத்தினா

னித்தம ரக்கடல் வைப்பின

லுன்பதத் திறயாமல்

சத்தம ரெவ்வுரு வுற்றன

ளெங்கனுந் தங்கிலனே. 75

72. தங்களை யுண்டவ லிங்கெவ்

வுணின்றவ தத்துரலம்

பொங்கணை வுற்றிழி புண்ணெழு

கூன்சீப் புலாலொடுகண்

மங்களை யுற்ற வுடலையெவ்

வாறயன் வைந்துக்கைம்ம

நங்களை யாமற்செய் தானெமக்

கேயுன் னநாறலினே. 76

73. நாறு வளரு மழைபெய்

யநின்னரு ணாடவன்பர்க்

கூறு மனத்தன் பதாலுடல்

போய்முத் தியுய்க்கப்பமே

சோறுமற் றுண்டிவ் வுடல்பருக்

குந்தொறுந் துன்விகார

மாறு மெனக்கு வளர்ந்தாலென்

னாமெவு ளாண்டவனே. 77

74. ஆண்டதுண் டென்னை யெனில

டையாள மறிகிலனே

பூண்டவென் னன்பு புலன்வழி

வீணுறப் போகலினே

தீண்ட வுதிப்பெனக் கெங்ஙன

நீயன்னஞ் செய்தனையோ

நீண்ட வுருவ வருளொரு

வாவெவ் வுணிர்மலனே. 78

75. மலங்கப் பிணிபிணி காளெவ்

வுளீசன் வறுங்கல்லையன்

றிலங்கப்பெண் ணாக்கின தாளா

லிருத்திடி னென்றலையிற்

றுலங்கப் பெருஞ்சித் துருக்கொள்

வெனீரி டந்துனைலின்றிக்

கலங்கப் பெறுவிர கன்றுறை

மின்வணாங் காரிடத்தே. 79

76. இடத்திற் சிரத்தில் வைத்தரன்

வொவ்வொரு வினைபெண்முகத்

திடத்திற் பிரம னவைத்தா

னொருபெண் பொறியென்றுநித்

திடத்திற் பரித்தைநீ யெவ்வுள

யான்ப லதையலுள்ளத்

தடத்திற் பரித்தே னுளரொவென்

போலிச் சகதலத்தே. 80

77. சகல சராசரத் தின்று

யருட்சஞ் சரிப்பையென்று

புகல மறைகரு மப்பம

யென்றுட் பொருந்துனக்கென்

இகல வறுமையி னால்வருந்

துன்ப மியைந்திலதோ

அகல வறுக்கா திருப்பதென்

னெவ்வு ளருட்கடலே. 81

78. அருளைப் பொழிந்தென் பரன்புப்
பயிர்வளர்த் தாளெவ்வுளாய்
தெருளைப் படுக்க வருமூப்
பலக்கண்கள் செய்யுமென்றே
யுருளைப் படுகின் றவெனெஞ்சங்
கட்டி வுடற்றுநமன்
மருளைப் பொருந்த வதைக்குந்து
யர்க்கெவ் வணமுறுமே. 82

79. வணங்கா ருனையென் னினைந்தோ
வினோத மகிமைபல
குணங்கா சினியிற் பதிதொறு
நீசெய்யுங் கொள்கைமீண்டும்
மணங்கா விரியெவ் வுளாயுண்
விஷயத்தின் மன்னர்சற்று
இணங்கா முடிமுத லாக்கொண்
டறிவி விழிஞர்களே. 83

80. இழிந்த பகைவ நலியத்துன்

போடெவ் விலோகருமுன்

வழிந்த வரின்னரு ளேற்றெவ்

வுளீசதம் வாதையறப்

பொழிந்தனர் பாவஃ தறியா

மனாடுவா யுல்லியர்மற்

றொழிந்த விபுதரை நீரென்

றுகானலை யுன்னலொத்தே. 84

81. உன்னை யிகழ்ந்த வரைக்கொண்

டெமனர குய்ப்பனப்போழ்

தென்னை படுவர் துயர்கூர்ந்தச்

சோவென் றிரங்கிறைந்துன்

றன்னை முனிகுவ னானன்

னவர்க்கத் தகாவறிவை

முன்னை யளித்தனை யென்றெவ்வுள்

வேத முடிப்பொருளே. 85

82. பொருளினை யீட்டி யறஞ்செய்

திசையுடற் பூணவென்னி

லிருளினை யீட்டிந் தொழிலுண்

டுனக்கன் பிலுற்றவென்னின்

மருளினை மாட்டும் விகாரமுண்

டெற்கிங்ஙன் மற்றுனக்கும்

அருளினை நாட்டிட யாதுண்

டுரையெவ் வுளாகரனே. 86

83. ஆகர மாவருட் கானவ

வெவ்வுள லங்கற்றுழாய்

சேகர வென்றும் வடிவே

பெறாநின் றிருவருளாஞ்

சாகர மெற்கு முறுமெனி

லென்னங்கில் சாகுமுடற்

சீகர மொற்கு முறற்குரை

பார்கொளென் சீதரனே. 87

84. தரமறி யாதுநின் னன்பரைக்கோ

பிப்பன கொண்டற்குகந்

தரமறி நோக்கினர்க் கும்முயிர்ப்

பங்கு தருவன்வெங்கள்

தரமறி வாகனற்கீ வேலுட

லைத்தனி யெவ்வுண்மந்

தரமறி யம்புய்யா னுய்வதெங்

ஙன்சொல தந்திரமே. 88

85. தந்திரங் கந்தரங் மந்திர

சுந்தர சந்த்ரமுகா

சிந்தி ரணந்தொறும் வந்து

திரந்தெவ்வர் சிந்திகந்த

மந்திர வெஞ்சம முந்திய

முந்தைய வந்தனமென்

றிந்திர னின்று நிரந்திர

முந்தொழு மெவ்வுளனே. 89

86. எவ்வுளந் தானத் தனென்மன
மேயெவ் விடத்துமுயிர்
எவ்வுளந் தன்னிலுந் தங்குவ
னாமைந் திரும்புலனாந்
தெவ்வுளந் தேடுக நின்னுள
மும்முளன் றேடினவை
தெவ்வுளந் தப்படக் கோறு
முபாயத் திரமுமிதே. 90

87. திரமுற் றஞானஞ் சற்றல்லா
மலுன்பதஞ் சேர்வரோவல்
உரமுற் றலின்றிச் செருசெய்
வரோவெள் ளுறழ்பொருளும்
கரமுற் றலின்றி யறஞ்செய்
வரோவென் கடவனந்தோ
பரமுற் றவெவ்வுள யாதுமற்
றன்பிலென் பாரிடத்தே. 91

88. பாரிடந் தீசெய் யறன்பா
ரிடம்புரி பாவமுள
ஆரிடந் சொல்வே னுடறின்
றுதாங்கியு மாகலினே
வாரிடந் தோங்கு முலையாள்
கனகவல் லிக்கொண்கனே
சாரிடந் தோன்று வனைகொண்
டுனையெவ்வுட் டானத்திலே. 92

89. தானக் கரியின் மருப்பொடித்
தாயண்டந்தந் துதுட்ட
தூனக் கரிய நிசாசரர்க்
கொன்றிங் குழலுமக்கள்
வானக் கரியவிந்த் ராதியர்க்
காத்துமும் மைத்தொழில்கொண்
மானக் கரியெனு மெவ்வுள
வெத்தொழின் மற்றும்பர்க்கே. 93

90. மற்றும் பரதெய்வ முண்டெனி
னின்னிடம் வந்தண்டங்கள்
முற்றும் பலவுயிர் யாவு
மடங்கி முடித்தலென்னே.
பெற்றும் பெறாவழி ஞர்க்கென்
புதல்வல் பெருமவெற்குப்
பற்றும் பொருளும் பயக்குஞ்
சுகமுநின் பாதங்களே. 94

91. பாதபங் கேருக பத்ம
விலோசன பத்மநாப
நாதபங் கன்பரைக் கிட்டா
தருள்பவ நற்றிருச்ச
மேதபங் குன்னிடம் பெற்றார்
களோசில் விபுதர்கொடுந்
தீதபங் கொண்டலை வாரே
வனெவ்வுட் சிகாமணியே. 95

92. மணிவண் ணவெண்ணுந் துவாதச
நாம வதனங்கஞ்ச
பணிவண் ணதியர்க் குவமே
யமானவ பன்னுமறை
துணிவண் ணகிற்றில வாமென்
வுளவென றாயாமுறும்
பிணிவண் ணமானிட வின்பம்வா
ளர்பெரும் பேறுடைத்தே. 96

93. பேறுக் கலைவதென் னெல்லாக்
கொடுமையும் பேதமின்றி
வீறுக்குச் செய்தனை வேம்பூன்றிக்
கன்னலை வேண்டலொத்தே
சோறுக் குழலு மதியே
மதிமதி தொன்றுமிடை
யூறுக் குதவெவ் வுளூரனம்
போருக வொண்பதமே. 97

94. பதங்கண் டபோதெவை செய்கில
வெவ்வுளிற் பண்ணவன்பூம்
பதங்கண் டபோதெவர் முத்தியின்
றாயினர் பானுவையே
நிதங்கண் டபோதெக் கமலம்விள்
ளாதன நின்னிடஞ்சற்
றிதங்கண் டபோதுனக் கேனருள்
கிட்டில தென்னஞ்சமே. 98

95. நெஞ்சங் கிடப்பன முக்குற
றாமாத யநீர்த்தடத்திற்
கஞ்சங் கிடப்பன போற்றுதி
பூசைமெய் காதனன்மை
கொஞ்சங் கிடப்பனமே லாகச்
சைவலக் கொள்கையென
தஞ்சங் கிடைப்பன வோவெனக்
கெவ்வுட் டயாசிந்துவே. 99

96 சிந்திக் குழுவருக் கேற்றே

வொழுகுந் திறஞ்சற்றுமில்

மந்திக் குழுடன் றெரிவரி

தாயெவ் வுளவாய்மரா

வந்திக்கு நாலா வதாந்தெய்

வமேயுண் வழிப்பட்டெங்ஙன்

புந்திக் குளார்வம் பொருந்தி

யொழுகுவல் பூதலத்தே. 100

97. பூதமைந் தானுடல் செய்துவித்

தாயெனிந்தப் பொன்னைமுன்

காதமைந் தாரு நரசிங்

கமானவ காசிபன்வி

நோதமைந் தர்வெவ்வுள் வீரநின்

றொண்டன் புநோற்கவதின்

மீதமைந் தர்வன யாவுங்கொள்

வாய்வல்லை வீயுமுன்னே. 101

98. வீயா மற்செல்வம் விரவர்

மனோய்மெய் விழாமலுநீ

மாயாமற் பாலிக் கிறுமென்

மனத்தொடு வாழ்வுவக்கேன்

நாயாமற் பன்றனைக் கண்ணோட்

டமிட்டு நணுகிச்சற்றும்

காயாமற் காத்தரு ளெவ்வுளி

னேரற் றகாகுந்தனே. 102

99. குத்துந் திரைகட லேழையு

மோர்கணை கோத்திட்டனை

தத்து ருதொலென்பவ் வாரிதிக்

கோபால சரம்விடிறும்

மத்துந் திநாட்டினு மேகலங்

காவெவ்வு வாண்பருவ

பத்துந்தந் தாய்நின் னருட்கடைக்

கண்ணே படவற்றுமே. 103

100.படப்படி யோர்களுண் பேரென்

னெனவிப் பவமெறும்வெவ்

விடப்படா நீக்குநின் யேருரை

யாவெனை மெல்லவென்பே

ரிடப்பட் டதாகுநா ராயண

தாசனென் னச்செய்தநின்

றிடப்பட் டதாமுத் திநன்றுநன்

றெவ்வுட் டிருவுரனே.

# திருவெவ்வுளூரந்தாதி

## 1. செய்யுட்முதற்குறிப்பகராதி


| பாடலடி | பாடல் எண் |
|---|---|
| 1.அத்தா வணைச்சக் | 4 |
| 2.அரியேயலகை முலையுண்டழித்த | 37 |
| 3.அருளைப் பொழிந்தென் | 78 |
| 4.அறிவாய் மனித | 52 |
| 5. ஆகார மாவருட் | 88 |
| 6.ஆண்டதுண் டென்னை | 74 |
| 7.ஆயுங் குதலை | 66 |
| 8.ஆழிசங்கை மாற்களித் | 0.0 |
| 9.ஆனந்தமாய் நின்னையேயனையாய் | 36 |
| 10.இடத்திற் சிரத்தில் | 76 |
| 11.இராக மொழித்தே | 54 |
| 12.இருந்தா யெழிலெவ் | 32 |
| 13.இழிந்த பகைவ | 80 |
| 14.இறுதி பெறாவெனை | 46 |
| 15.இன்றல மந்தன | 7 |
| 16.ஈண்டு விளைநில | 68 |
| 17.உத்தம பத்தரை | 71 |
| 18.உழைவி ழிமாதி | 45 |
| 19.உன்னை யிகழ்ந்த | 81 |

| | |
|---|---|
| 20.ஊர்ந்தான் கருடப்புள் | 14 |
| 21.எவ்வுளந் தானத் | 86 |
| 22.என்கோத ரமுடித்திங் | 0.2 |
| 23.என்றா யெனிமெனை | 10 |
| 24.என்னைக் கருதுரை | 16 |
| 25.ஏற்கும் பதமரு | 50 |
| 26.கடத்த நினக்கு | 55 |
| 27.கடத்த விரும்பாத | 23 |
| 28.கண்டா மெனுமொழி | 3 |
| 29.கண்ணமை யென்ன | 22 |
| 30.கராவுகச் சேதிதவந் | 35 |
| 31.காதலை யான்சொலி | 12 |
| 32.கார மருந்த | 24 |
| 33.காவல ரும்பன | 21 |
| 34.குத்துந் திரைகட | 99 |
| 35.கூடு மடியருட் | 8 |
| 36.கூறுங் களியன | 65 |
| 37.சகல சராசரத் | 77 |
| 38.சக்கரத் நற்புதற் | 62 |
| 39.சண்டைகொண் டெண்டிசை | 63 |
| 40.சலசத் திருவரை | 60 |
| 41.சாரலை வேங்கடச் | 5 |
| 42.சாலுங் கொடியனைப் | 20 |
| 43.சிந்திக் குமுவருக் | 96 |

| | |
|---|---|
| 44.சீரார் குருகையன் | 0.1 |
| 45.சுந்த ரமாயுண்மெய் | 59 |
| 46.தங்களை யுண்டவ | 72 |
| 47.தந்திரங் கந்தர | 85 |
| 48.தரமறி யாதுநின் | 84 |
| 49.தாங்கிலை யேனுந் | 33 |
| 50.தாதா சுகப்பொறி | 39 |
| 51.தானக் கரியன் | 89 |
| 52.திதித்த ததிதுதை | 38 |
| 53.திரமுற் றஞானக் | 87 |
| 54.திருவரன் பாரிற் | 1 |
| 55.தேசவி ராடக | 67 |
| 56.தேற்றினன் தொண்டரை | 15 |
| 57.நாமஞ் சொலுந்தொழுந் | 56 |
| 58.நாறு வளரு | 73 |
| 59.நினைத்தனை யென்னி | 34 |
| 60.நுவன்று பநுவலை | 51 |
| 61.நெஞ்சங் கிடப்பன | 75 |
| 62.நோன்ற தவங்களு | 13 |
| 63.படப்படி யோர்களுண் | 100 |
| 64.பதக்கணி லெவ்வுளுள் | 40 |
| 65.பதங்கண் டபோதெவை | 94 |
| 66.பரந்தா னுனக்குப் | 9 |
| 67.பரனை கனகாம் | 17 |

68.பரிந்திடக் கஞ்சனைக் 48
69.பற்றின மற்றிலன் 6
70.பாதபங் கேருக 91
71.பாரதி கந்தரந் 0.3
72. பாரிடந் தீசெய் 88
73.பாவனை செய்ய 47
74.பாழுங் கருங்குழி 41
75.பூட்டா யுதிபவங் 19
76.பூதமைந் தானுடல் 97
77.பேறுக் கலைவதென் 92
78.பொரியா யுளத்திற் 18
79.பொருளினை யீட்டி 82
80.போற்றுந் தசவ 70
81. மங்கலந் தங்க 26
82.மட்டுமற் கட்டிய 61
83.மணிவண் ணவெண்ணுந் 93
84.மலங்கப் பிணிபிணி 75
85.மலைவருந் தங்கள 25
86.மற்றும் பரதெய்வ 90
87.மனவலங் கார 28
88.மாயா வுடலருண் 2
89.மாற்றரும் புன்மைய 31
90.மானவ நந்த 29

91. மான்மா மனமன் 42
92. முயங்கு மறைகண் 11
93. முன்னந் தனுச்சேமஞ் 43
94. மூடும் படிபா 53
95. வணங்கா ருனையென் 79
96. வண்டலங் கந்த 30
97. வந்தனந் தந்த 29
98. வலவா வொழிவருள் 44
99. வாழ்வார் மறைத்தமிழ் 58
100. வித்தக மார்ந்தின் 69
101. விண்டல மண்டல 64
102. விளங்க வெமக்கருள் 54
103. வீயாமற் செல்வம் 98
104. வேதனை யான்னறி 49

# 2. சொல்லடைவு


| | |
|---|---|
| அச்சுத | 61 |
| அடிமை | 14 |
| அடியருள் | 12 |
| அடியன் | 7 |
| அடியார் | 35 |
| அத்தன் | 7 |
| அத்தா | 8 |
| அந்தமானவன் | 39 |
| அமரர் | 5 |
| அரவிந்தம் | 7,37 |
| அருட்கடல் | 81 |
| அருள் | 13, 14, 17, 21, 25, 48, 52, 54, 58, 59, 81, 82, 84, 86, 98, 103 |
| அழிஞர் | 94 |
| அறிஞர் | 72 |
| அறியாநர் | 53 |
| அனையர் | 38 |
| அன்பர் | 11, 16, 19, 37, 77, 88 |
| அன்பன் | 19, 43 |
| அன்பு | 101 |
| அன்னை | 20 |
| ஆகரன் | 87 |
| ஆண்டவன் | 77 |
| ஆதியர் | 68 |

| | |
|---|---|
| ஆர்வம் | 100 |
| ஆழி | 1 ,30 |
| ஆழ்வார் | 62 |
| இந்திரன் | 25 |
| இந்திராதிதேவர் | 74 |
| இந்திராதியர் | 93 |
| இமுக்கன் | 6 |
| இம்பர் | 7 |
| இரவலர் | 13 |
| இழிஞர் | 35 |
| ஈசன் | 79 |
| ஈமக்குறள் | 9 |
| உடல் | 101 |
| உத்தமன் | 74 |
| உம்பர் | 24, 44, 93, 94 |
| உல்லியர் | 84 |
| உள்ளம் | 10 |
| எழில் | 23, 36 |
| எழிறோள் | 26 |
| கஞ்சன் | 52 |
| கடத்தவன் | 55 |

| | |
|---|---|
| கடல் | 4, 62, 81 |
| கடவுளர் | 58 |
| கடைக்கண் | 103 |
| கண்ணா | 15 |
| கமலத்தன் | 24 |
| கமலம் | 98 |
| கரன் | 21 |
| கருடப்புள் | 18 |
| கருவரன் | 5 |
| கழல் | 3 |
| களியன் | 69 |
| களிறு | 44 |
| கனகவல்லி | 3, 92 |
| கனகாம்பரன் | 21 |
| கன்மம் | 27 |
| காசிபன் | 101 |
| காந்தன் | 26 |
| காரணன் | 27 |
| காவலர் | 25 |
| கானகம் | 49 |
| கிருபாகரன் | 21 |
| குந்தன் | 102 |
| குழலுமக்கள் | 93 |
| கேசவ | 49 |
| கொங்கை | 4 |
| கொடியன் | 24 |
| கொற்றவர் | 66 |

| | |
|---|---|
| கொற்றவ | 65 |
| கோபால | 102 |
| கௌரி | 5 |
| | |
| சகோதரன் | 21 |
| சக்கரன் | 65 |
| சக்ரவர்த்தா | 8 |
| சங்கம் | 30 |
| சண்டன் | 36 |
| சந்த்ரமுகா | 89 |
| சரம் | 12 |
| சிகாமணி | 95 |
| சித்தா | 8 |
| சினம் | 14 |
| சீதரன் | 87 |
| சுட்டியவர் | 37 |
| சுதன் | 41 |
| சுந்தரம் | 43 |
| சுந்தரன் | 62 |
| சுரர் | 18 |
| செல்வம் | 102 |
| சென்னி | 1 |
| சேய் | 28 |
| சொல்வர் | 53 |
| | |
| தஞ்சம் | 99 |
| துமபரர் | 70 |

| | |
|---|---|
| தயாசிந்து | 99 |
| தவத்தன் | 74 |
| தாய் | 28 |
| தாள் | 2, 12, 79 |
| திருவரன் | 5, 87, 104 |
| தினகரன் | 38 |
| துளசிதரன் | 21 |
| தெய்வம் | 100 |
| தேசிகன் | 70 |
| தேவி | 68 |
| தேவியர்மக்கள் | 61 |
| தொண்டர் | 19, 68 |
| | |
| நமன் | 29 |
| நரசிங்கம் | 101 |
| நரம்பன் | 39 |
| நவநீதம் | 27 |
| நற்றாள் | 4 |
| நாராயணதாசர் | 104 |
| நிசாசரர் | 93 |
| நிரை | 11 |
| நிர்மலன் | 78 |
| நூலறிவு | 17 |
| நெஞ்சம் | 27, 98, 99 |
| நெஞ்சு | 9 |
| நோன்றவன் | 16 |
| | |
| பங்கயம் | 4, 15 |

| | |
|---|---|
| படியோர் | 104 |
| பண்ணவன் | 98 |
| பத்தர் | 10, 75 |
| பத்தா | 43 |
| பத்மநாப | 95 |
| பரந்தாபன் | 13 |
| பரன் | 21 |
| பருவரன் | 5 |
| பாரதி | 4 |
| புண்ணியம் | 27 |
| புதல்வ | 31 |
| புதல்வன் | 53 |
| பூதமைந்த | 101 |
| பூதூர் | 1 |
| பூவரன் | 21 |
| பெண் | 29, 60, 80 |

| | |
|---|---|
| மடவார் | 9 |
| மணிவண்ண | 31, 96 |
| மதி | 54, 97 |
| மயல் | 34 |
| மயன் | 12 |
| மருவரன் | 5 |
| மருள் | 86 |
| மனம் | 8, 30, 51, 102, 104 |
| மன்னர் | 79 |
| மாதவ | 68 |

| | |
|---|---|
| மாதவன் | 40 |
| மாது | 49 |
| மாயவன் | 5, 30 |
| முத்தி | 8 |
| முலையாள் | 92 |
| மூடன் | 15, 56, 100 |
| மூரல் | 9 |
| மூர்க்கன் | 47 |
| மூவர் | 100 |
| மெய்யுரு | 16 |
| மைந்தர் | 101 |
| ரதி | 44 |
| ராகவ | 71 |
| ராகவன் | 60 |
| ருக்மணி | 26 |
| வதனம் | 80 |
| வராக | 96 |
| வரைவித்தனன் | 30 |
| வனமாலை | 34 |
| வாழ்வலன் | 47 |
| வித்தகன் | 72 |
| விபுதர் | 71, 84, 95 |
| விமலர் | 73 |
| விரவர் | 102 |

| | |
|---|---|
| விரும்பதர் | 27 |
| விழிச்சியர் | 67 |
| வீரராகவ | 59 |
| வைத்தரன் | 80 |
| வேங்கடம் | 9 |
| வேதவிறுதியன் | 94 |

## 3. அருஞ்சொற் பொருள்

அதி - அதிகரித்த

அதித்தது - அதிக ஆபத்து

அதீதா - குற்றமில்லாதவனே

அத்த - அத்தனே

உ - உண்ட

உதித்தது - தோன்றியது

ஓதத்து - சமுத்திரத்தில் சயனித்த

ததத்து - அகலத்தையுடைய

ததி - தயிரை

ததித்த துதித்தது ததித்ததுதித்தென்ன - தாளம் ஏத்திக்கட்டி

ததை - நெருங்கிய

தத்தத்த - கொடுப்பவனே

தத்துதாண்டின் அத்த - எப்பொருளுமுடையவனே

தா - பரமபதத்தைத் தந்தருள்

தாது - பூந்தாது

திதித்த - நிலைத்த

திதித்து - என்னை ரசித்தும்

தித்தித்தே - இரசித்தே

துதம் - அசைவுடைய

துதித்த - யாவராலும் துதிக்கப்பட்ட

துதை - நெருங்கிய

துத்தத்தொத்து - நாயாகிய வடிமைக்கு

துத்தி - பாம்பின் படப் பொறியில்
தூ - உடலாகிய ஊனால்
தூதித்து - பாண்டவர்
தூதினன்மைக்கு - ஒத்த (சரியான)
தே - தெய்வம்

அமரர் - தேவர்
அரவிந்தம் - தாமரை
ஆழி - கடல்
இந்திரனயன் - இந்திரனின் தலைவன்
இழிஞர் - புலையர்
ஈமம் - முடிவு
உம்பர் - தேவர்
கமலம் - தாமரை
கழல் - கால்
கனக வல்லி - தங்க மேனியை உடைய தாயார்
கன்னல் - கரும்பு
கார மருந்தணி மேனி - கருப்பு நிறத்தன்
கான்மலர் - தேன் சொரிகின்ற மலர்
குரு - ஆசான்
கொற்றர் - நெறியாளர்
சஞ்சரித்தல் - நடமாடுதல்
சண்டன் - இயமன்
சலதி - கடல்

சுந்தரன் - அழகு நிறைந்தவன்

சுரர் - தேவர்

சென்னி - தலை

தாமம் - ஒழுங்கு

தினகரன் - சூரியன்

நமன் - இயமம்

நவநீதம் - வெண்ணெய்

நற்பரம வீடு - இறைவன் இருக்கும் வீடு

நிரை - ஆநிரை

நிர்மலன் - மாசில்லாதவன்

பங்கயம் - தாமரை

பத்மம் - தாமரை

பரிமளம் - மணம்

பூட்டகம் - அகத்தில் மறைந்து கொண்டு பூட்டிக் கொண்டிருப்பவர்

மடவார் - பெண்கள்

மருப்பு - கொம்பு

மால் - திருமால்

மயல் - காமம்

மல்லளாரி - சண்டையில் வெற்றி பெறுபவர்

மூடன் - அறிவிலி

மூரல் - பல்

யீரல் - நுரையீரல்


ராகவன் - ராமன்

வராகம் - பன்றி


விபுதர் - அறிஞர், தேவர்


விமலம் - அழுக்கின்மை

விரவர் - பகைவர்





www.divyadesamonline.com









## துணைநூற் பட்டியல்


1. திருஎவ்வுளூர் வீரராகவ ஸ்வாமி - ஸ்தல புராணம்
2. அபிதான சிந்தாமணி
3. சிவப்பிரகாசக் கட்டளை